இதழ் 24 / மலர் 06
மே 2017 - ஜூலை 2017

தலைவி
இல 191, பௌத்தாலோக மாவத்தை,
கொழும்பு - 04
தொ.பேசி : 0112 506272
தொ.நகல் : 0112 585190
மின்னஞ்சல்: info@viluthu.org

காலாண்டு இதழ்

# தலைவி

## தலைமைத்துவத்தை நோக்கி...

## மொனராகலையில் இடம்பெற்ற பெண் தலைமை தாங்கும் குடும்பத்தினருக்கான சர்வதேச தினம்



இலங்கையிலே சர்வதேச விதவைகள் தினத்தினை ஜூன் இருபத்து மூன்றாந்தி-கதியன்று அனுஸ்டிப்பதற்கு முதன்முதலாக விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம்தான் நிகழ்வுகளினை நடாத்தியும், ஊடக வெளியீடுகள் மூலமாகவும் மக்களுக்கு விழிப்புணர்வினை 2013 ஆம் ஆண்டிலிருந்து வழங்கி வருகின்றது. அதன் பிரதிபலிப்பாகவே பல நிறுவனங்களும் இணைந்து நம் நாட்டில் குறித்ததோர் தொகையினராகப் பெண் தலைமை தாங்கும் குடும்பத்தினர் உள்ளனர் என்பதனை ஏற்றுக்கொள்ள முன்வந்தனர். நலிவுற்றவர்களாக அடையாளப்ப்டுத்தப்பட்ட அவர்களுக்காக பிரத்தியேகக் கொள்கை ஒன்றினை உருவா க்கப் பாடுபட்டும் வருகின்றனர். வடக்கு கிழக்கினைப் பொறுத்தவரையில் எமது உறவுகளின் பிரச்சினைகள் பற்றிய ஆழமான புரிதல் உண்டு. ஆனால் எல்லையோர மாவட்டங்களில் இத்தகைய அக்கறை இல்லையெனலாம். எனவேதான் இம்முறை விழுது நிறுவனம் அண்மையில் எமது செயற்பாடுகளினை ஆரம்பித்த மொனராகலை மாவட்டத் தில் பெண் தலைமை தாங்கும் குடும்பத்தினருக்கான சர்வதேச தினத்தினை அறிமுகப்படு த்தியது. இதில் சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட பெண் தலைமை தாங்கும் குடும்ப அங்கத் தவர்களும், சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். மொனராகலை மாவட்டத்தினுடைய மாவட்ட செயலரின் வழிகாட்டலுக்க மைய சியம்பலாண்டுவ பிரதேச செயலர் திரு. ஏ.எம் நந்தசிறி அவர்கள் பிரதம அதி தியாகக் கலந்து கொண்டு, தேசிய விதவைகள் பட்டயத்தினைப் பெண் தலைமை தாங்கும் அங்கத்தவர்களின் பிரதிநிதிகளிடமிருந்து பெற்றுக் கொண்டார்.





## அன்புத் தோழியரே !

அனைவருக்கும் வணக்கம். மீண்டும் தலைவி இதழில் உங்களுடன் இணை வதில் மிக்க மகிழ்ச்சி. மாற்றத்தின் முகவரிகளாக நம் பெண்கள்-தோழியர் செயற்படுவதனைப் பார்க்கும்போது மிகவும் பெருமையாக இருக்கின்றது. அதேசமயம் எமது உறவுகள் கேப்பாப்பிலவிலும், இதர மாவட்டங்களிலும் தமது காணிகளுக்காகவும், காணாமற்போன உறவுகளுக்காகவும் நீதி கேட்டு வீதிகளில் தொடர் போராட்டங்களினை மேற்கொள்வதனைக் காணும்போது, மனதினை வலியுடன் கூடிய உணர்வு ஆக்கிரமிப்பதனைத் தவிர்க்க முடியவில்லை. ஆனாலும் மக்களது தொடர் போராட்டங்கள் இவர்களது பிரச்சினையில் எவ்வளவு தூரம் அரசினது கவனம் குவிந்துள்ளதென்பதனை வெளியுலகிற்கு எடுத்துக் காட்டுவதாய் அமைந்துவிட்டது. இவர்களுக்கெல்லாம் நீதியினை வழங்க நல்லாட்சி அரசாங்கம் இன்னும் எவ்வளவு காலம் கதை சொல்லிக் கொண்டே இருக்கப்போகின்றது என்பதனை நினைக்கும்போது சலிப்புடன் கூடிய வெறுப்புத் தோன்றுவதனையும் தவிர்க்க முடியவில்லை.

தகவல் பெறுவதற்கான உரிமைச்சட்டம் வந்ததன் பிற்பாடு எமது பெண்கள் தமது உரிமையினை நிலைநாட்டும் செயற்பாடுகளில் ஈடுபட ஆரம்பித்து விட்டனர். வாசகர்வட்டச் செயற்பாடுகள் மற்றும் பயிற்சிகள் மூலமாக அவர்கள் பெற்ற விழிப்புணர்வுதான் அவர்களைத் தாமதமின்றி தமது விண்ணப்பங்களினைத் தொடர்ச்சியாக அனுப்புவதற்கு உதவுகின்றது. எம்மால் எமது பிர தேசங்களில் வெளிப்படைத்தன்மையுடனும், கணக்குக்காட்டலுடனும் கூடிய கலாசாரம் விரைவில் நிலவுமென்பதில் எவ்வித அச்சப்பாடுமில்லை. மாவட்டந்தோறும் எமது தன்னார்வத் தொண்டர்களால் இவை தொடர்பான பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடத் தயாராகும் தலைவியரும், அவர்களது ஆதரவாளர்களும் மிகுந்த ஆர்வத்துடன் தமது வட்டாரங்களில் மக்களுடன் இணைந்து பணியாற்றத் தொடங்கி விட்டனர். அவர்களுக்கு ஆதரவாக அரசியல்வாதிகளும் பச்சைக்கொடி காட்டுவது சற்று ஆறுதலைத் தருகின்றது. நாம் நம்புவோம் பெண்களுக்கான இருபத்தைந்து சதவீத ஒதுக்கீட்டினைப் பிரதான கட்சிகள் மனதிற்கொண்டு இத்தகைய தலைவியரை உள்வாங்குவதில் தமது கவனத்தினைச் செலுத்துமென்று.

அரசியல்யாப்பு சீர்திருத்தத்திற்கான ஏற்பாடுகள் மிகுந்த எதிர்பார்ப்புடன் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. சிறுபான்மையினத்தவராகிய எமக்கு இது முக்கியமான தேவை. மீண்டும் எமக்கோர் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது எமது எதிர்பார்ப்புக்களை அரசியல்யாப்பு வழிப்படுத்தற் குழுவினால் உருவாக்க ப்பட்ட உபகுழுக்களின் அறிக்கைகளின் பிரகாரம் மிக விரைவில் கருத்துக்களாக சமர்ப்பிப்பதற்கு வாய்ப்புக்கள் கிடைக்கும். அது தொடர்பாக உங்களுக்கு விழுது தாமதமின்றி கருத்துக்களை வழங்க வழிகாட்டும்.

எங்கள் நிறுவனம் போரினாற் பாதிக்கப்பட்ட பெரும்பான்மையினச் சமூகம் வாழும் மொனராகலை மாவட்டத்திலும் நல்லிணக்கத்திற் பெண்கள் பங்குகொள்ளுதலினை உறுதிப்படுத்தும் செயற்பாடுகளினை ஆரம்பித்துள்ளது. அதற்கான நிதியினை நாம் ஐ.நாவின் சமாதானத்தினைக் கட்டியெழுப்பும் நிதியத்திலிருந்து பெற்றுள்ளோம். இத்திட்டம் கிடைத்தமையினை நாம் எமது நிறுவனத்தின் நல்லிணக்கச் செயற்பாடுகளுக்காகக் கிடைத்த சர்வதேச அங்கீகாரமாக நோக்குகின்றோம். உங்களது ஒத்துழைப்புக்களும், மிகச்சிறந்த செயற்பாடுகளும்தான் எம்மை வெளியுலகிற்கு இனங்காட்டி, இத்தகைய நிதி யினைப் பெற வாய்ப்பினை வழங்கியுள்ளது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. உங்கள் அனைவருக்கும் நாம் மிகுந்த நன்றியுடையவர்களாக இருக்கின்றோம்.

அன்புத் தோழியரே உங்களது செயற்பாடுகளினை எமக்கு அறியத் தருவதில் பின்னிற்காதீர்கள். அவைதான் உங்களை, உங்கள் செயற்பாடுகளினை வெளியுலகிற்கு இனங்காட்டுமென்பதனையும் மறந்து விடாதீர்கள்.
மீண்டும் அடுத்த தலைவியில் சந்திக்கும் வரை...

- அன்புடன் இந்து -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செங்கோலோச்ச விழையும் பெண்களுக்கோர் மகுடவிழா




விழுது ஆற்றல் மேம்பாட்டுமையம் அரசியலில் ஆர்வங் கொண்ட பெண் தலைவியரை அவர்களின் திறன்களை வளர்த்தெடுப்பதற்காக ஐரோப்பிய ஒன்றிய நிதியத்தின் கீழ்பயிற்சிகள், கலந்துரையாடல்கள், கருத்தமர்வுகள் மற்றும் அனுபவப் பகிர்வுகள் போன்றவற்றினை ஒழுங்குபடுத்தி நடாத்தி வருகின்றது. ZOA நிறுவனம் இதற்கான நிதியினை நேரடியாக எமக்கு வழங்குகின்றது. அண்மையில் இத்தலைவியரை மென்மேலும் வினைத்திறனுடன் செயற்படுகின்ற தலைவியராக உருவாக்கு வதற்காக "ட்ரான்பரன்சி இன்ரநாஸனல்" நிறுவனமும் பயிற்சிக ளினை வழங்குவதற்கு அனுசரணை வழங்கியிருந்தது.

இப்பயிற்சிகளினை முழுமையாகப் பெற்றவர்களுக்கு அண்மையில் கிளிநொச்சி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் ஓர் பாராட்டு விழா நடாத்தப்பட்டது. அதில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், திருகோணமலை, புத்தளம் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களினைச் சேர்ந்த பயிற்சி பெற்ற பெண் தலைவியர் பங்கு கொண்டிருந்தனர். பிரதம அதிதியாகத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய மாவை . சேனாதி ராஜா அவர்களும் சிறப்பு அதிதிகளாகப் பெண் பாராளுமன்ற உறுப்பினராகிய சாந்தி சிறிஸ்கந்தராஜாவும், வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினராகிய திரு. எஸ். சிறீதரன் அவர்களும் பங்குபற்றியிருந்தனர். பங்கு பற்றுனர்களுக்கான சான்றிதழ்கள் அதிதிகளால் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

## கௌரவ பெண் பாராளுமன்ற உறுப்பினர் சாந்தியிடமிருந்து ஒரு செய்தி!



சர்வதேச விதவைகள் தினம் ஒவ்வொரு வருடமும் ஜூன் இருபத்து மூன்றாந்திகதி உலகளாவியரீதியில் அனுஸ்டிக்கப்பட்டு வருகின்றது. ஐ.நா சபையினால் 2010 ஆம் ஆண்டில் மிக அண்மித்ததாகப் பிரகடனப்படு த்தப்பட்ட சர்வ தேச விதவைகள் தினம்தான் எமக்கு உலகிலே 258 மில்லியன் விதவைப் பெண்கள் வாழ்ந்து வருகின்றனரென்பதனையும், அதிலும் சுமார் 115 மில்லியன் பெண்கள் வறுமையில் வாடுகின்றனரென்ப தனையும் உலகிற்கு அறியத் தந்தது. எமது நாட்டைப் பொறுத்தமட்டில் வடக்கு-கிழக் கில் மட்டும் போரால் விதவைகளாக ஆக்கப்பட்ட சுமார் எண்பத்தொன்பதாயிரம் பெண்கள் வாழ்ந்து வருகின்றனரெனப் புள்ளிவிபரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

வடக்கில் நாற்பதாயிரம் விதவைப் பெண்க ளும், கிழக்கில் நாற்பத்தொன்பதாயிரம் விதவைப் பெண்களும் வாழ்ந்து வருவதுடன் அவர்களில் சுமார் பன்னிரெண்டாயிரம் பெண்கள் நாற்பது வயதை அண்மித்தவர்களென்றும், எட்டாயிரம் பேருக்கு மேல் மூன்றுக்கும் மேற்பட்ட குழந்தைகள் உள்ளவர்களென்றும் அறிய முடிகின்றது.

இலங்கையில் சிறுபான்மையினராகத் [illegible] [illegible] பெரும்பான்மையினராக இத் தொகை இருப்பது பல செய்திகளை அழுத்தமாக எமக்குச் சொல்லி நிற்கின்றன.

சமூக, பொருளாதார, உளவியல் ரீதியாகவும் பாதுகாப்பு ரீதியாகவும் பல்வேறு நெருக்கடிகளின் மத்தியிலே போராற் பாதிக்கப்பட்ட பெண்தலைமை தாங்கும் குடும்பங்கள் கண்ணீருடன் வாழ்ந்து வருகின்றனர். தமிழ் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களைப் பொறுத்தமட்டில் வன்முறை, அசாதாரண காரணங்கள் மற்றும் இயற்கை மரணங்களாற் பாதிக்கப்பட்டவர்களை விட யுத்தத்தினாற் பாதிக்கப்பட்டவர்களே அதிகம். பெண்கள் எதிர்கொள்கின்ற பொதுவான பிரச்சினைகளோடு பெண் தலைமை தாங்கும் குடும்பப் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் அதிகம். ஏற்கனவே நான் கூறியது போன்று பொருளாதாரம், பாதுகாப்பு, உளவியற் தாக்கம் மற்றும் சமூகப்பிரச்சினைகளென அவர்கள் இன்னோரன்ன பிரச்சினைகளினை நாளாந்தம் எதிர்கொள்கின்றனர். மக்களின் கவனத்தினை ஈர்க்கின்ற சர்வதேச தினங்களிலே பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் பிரச்சினைகளை எமக்கு ஆழமாகப் புரிந்து அவர்களுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்துவைக்க வேண்டிய தேவைப்பாட்டினை உணர்த்தும் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கான சர்வதேச தினத்திலே நாம் எல்லோரும் இணைந்து ஓர் உறுதியினை எடுத்துக் கொள்ளவேண்டும்.

போராற் பாதிக்கப்பட்ட இத்தகைய பெண்களின் நலன்களையும் பொருளாதார மேம்பாட்டினையும் பொருத்தமானதோர் பொறிமுறையின் மூலமாக நகர்த்த வேண்டும். இவர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் ஒரு சில அமைப்புக்கள் காணப்படுகின்றபோதும் அவற்றின் செயலூக்கம் இப்பெண்களின் தேவைகளைச் சொற்பமேனும் நிறை வேற்றக்கூடிய நிலையிலில்லை என்பதுதான் கவலைக்குரியது.

யுத்தம் மௌனித்து எட்டு ஆண்டுகள் சென்றபோதிலும் உதட்டளவில் அவர்களின் பிரச்சினைகளைப் பேசிக்கொண்டிருக்காது செயலில் பொருத்தமானதோர் முன்னேற்பாட்டு நடவடிக்கையினை மேற்கொள்ள உறுதிகொள்ள வேண்டும்.


குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இப் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களினைப் பிரதிநிதித்துவ ப்படுத்தும் அமரா குடும்பத் தலைமை தாங்கும் பெண்கள் ஒன்றியங்கள் போன்ற அமைப்புக்களினைப் பலப்படுத்தி, சட்டரீதியாகப் பதிவு செய்து மாகாணசபை நிதி ஊடாக அரச உத் தியோகத்தர்களின் கண்காணிப்புடன் வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டங்களை நடை முறைப்படுத்த வேண்டும். திட்டச் செயற்பாடுகள் மீளாய்வு செய்யப்பட்டு காலத்திற்குக் காலம் பொருத்தமான மாற்றங்கள் ஏற்படுத் தப்பட வேண்டும்.


இப் பெண்களுக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் அர்ப்பணிப்புடனும், வெளிப்படைத் தன்மையுடனும் அமைதல் வேண்டுமென எதிர்பார்க்கின்றேன். இதற்காகச் சம்பந்தப்பட்ட அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட முன்வருவோமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் அறியும் சட்டமூலமும் மக்களது ஆர்வமும்









**தகவல் பெறுவதற்கான உரிமையினை முழுமையாகப் பயன்படுத்தி, சமுகப் பொறுப்புள்ளவர்களாகச் செயற்படுவோம்.**

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம்

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் மக்களது தகவல் பெறுவதற்கான உரிமை தொடர்பான செயற்பாடுகளை வாசகர்வட்டங்கள் மூலமாகவும் பயிற்சிகள் மற்றும் பரிந்துரைச் செயற்பாடுகள் மூலமாகவும் கடந்த பல காலங்களாக முன்னெடுத்து வருகின்றது. இதற்காக வாசகர்வட்டத் தலைப்பு க்கள் மற்றும் ஆவணப்படுத்தப்பட்ட இதர நாடுகளின் ஆவணப்படங்களையும் பெண்களுடனும், இளைஞர் குழுக்களுடனும் பகிர்ந்து வருகின்றது. கடந்த வருடங்கூட கிழக்குப் பல்கலைக்கழகத்தின் *'கிழக்கின் அகல்'* தன்னார்வத் தொண்டர்கள் இதனைப் பிரசாரமாக முன்னெடுத்து, துண்டுப்பிரசுரங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் மூலமாக மக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தி வந்தனர். பெப்ரவரி மாதம் தகவல் பெறுவதற்கான உரிமை சட்டமாக அங்கீகரிக்கப்பட்டதன் பிற்பாடு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களும், வாசகர்வட்டங்களும் இந்த உரிமையினைப் பயன்படுத்தி, தமது காணாமலாக்கப்பட்ட பிள்ளைகள் தொடர்பாகவும், காணிகள் தொடர்பாகவும், தமது வாழ்வாதாரத்துக்கான கிடைப்பனவுத் தொகைகள், வீட்டுத் திட்டங்களின் போது மறுக்கப்பட்ட தகவல்கள், சமுர்த்திப் பயனாளிகள் தெரிவின்போதான குளறுபடிகளைத் தெரிந்து கொள்வதற்காகத் தகவல்களைக் கோருதல் என இன்னோரன்ன விடயங்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாகவும் விண்ணப்பங்களினை அனுப்பத் தொடங்கி விட்டனர். பார்ப்போம் எமது பிரதேசத்தில் மக்கள் தமது தகவல் பெறுவதற்கான உரிமையினை நிலைநாட்டி, வெளிப்படைத் தன்மையும் கணக்குக் காட்டலுடன் கூடியதுமான கலாசாரத்தினைத் தோற்றுவிக்கின்றார்களாவென்று.

# இலங்கையில் அரசியல் அமைப்பு உருவாக்கம்

நீடித்த போர் இடம்பெற்ற நாடுகளில் நிலையான சமாதானம், நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி போன்றவற்றினை ஏற்படுத்துவதில் அரசியல் மறுசீரமைப்பு (Constitutional reform) என்பது மிகவும் அவசியமானதோர் விடயமாகும். அந்த வகையில் நம் நாடான இலங்கையில் தொடர்ச்சியாக இடம்பெற்ற ஆட்சிமாற்றமும் மற்றும் நல்லாட்சிக்கான கோரிக்கைகளும் புதிய அரசியலமைப்புக்கான தேவையினை ஏற்படுத்தியுள்ளன.

இதன் பின்புலத்திலேயே 2016ஆம் ஆண்டிலிருந்து புதிய அரசியலமைப்பு உருவாக்கத்திற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் விசேடமாக மக்கள் கருத்தறியும் குழு ஸ்தாபிக்கப்பட்டமை பலராலும் பாராட்டப்பட்டு வருகின்றது. இலங்கையின் அரசியலமைப்பு உருவாக்க வரலாற்றில் பிரஜைகளின் அபிப்பிராயங்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். இது அமெரிக்க அரசியல் விஞ்ஞானி 'தோமஸ் பெயின்' என்பவரின் கூற்றினை நினைவுபடுத்துவ தாயுள்ளது. *" அரசியலமைப்பு உருவாக்கம் என்பது அரசாங்கங்களின் பணியல்ல அது மக்களின் பணியாகும்". பிரஜைகளே அரசாங்கத்தை உருவாக்குகின்றனர். எனவே எப்பொழுதும் அரசியல் அமைப்பு உருவாக்கம் என்பது பிரஜைகளை மையப்படுத்தியதாகவே அமைய வேண்டும்.* இக்கருத்து இலங்கைச் சூழலுக்கும் பொருத்தமானதாகும். புதிய அரசியல் அமைப்பு உருவாக்கத்தில் பிரஜைகளின் பங்கேற்பு மற்றும் முயற்சிகள் பெரிதும் அவசியமாகக் காணப்படுகின்றன. அரசியலமைப்பின் உள்ளடக்கம் மற்றும் அதன் சட்டத்தன்மை போன்றவை மக்களின் விருப்பத்திலேயே தங்கியுள்ளன. சகல பிரஜைகளினதும் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளாத அரசியமைப்பு 'சமூக ஒப்பந்தம்' என்ற உயர் அந்தஸ்தினைப் பெற்றுக் கொள்ளப் போவதில்லை. புதிய அரசியலமைப்பானது பிரஜைகளுக்கு அதிக அதிகாரத்தினை வழங்குவதாக அமையவேண்டும். அத்தகையதொரு அரசியல் அமைப்பே இலங்கைக்குத் தேவையாகவுள்ளது.

நல்லாட்சி, ஜனநாயக விழுமியங்கள் மற்றும் ஊழலற்ற ஆட்சி போன்றவற்றினை உறுதி செய்வதற்கு அவசியமான சட்டகத்தைப் புதிய அரசியலமைப்பு வழங்கவேண்டும். இந்நோக்கத்தை அடைந்து கொள்வதற்குப் பிரஜைகளின் தொடர்ச்சியான பங்கேற்பு மற்றும் கலந்துரையாடல்கள் அவசியமானவையாகும்.

அரசியலமைப்பு உருவாக்கத்தின் பிறிதொரு விடயம் பதினோருபேர் கொண்ட வழிநடத்தற்குழு உருவாக்கப்பட்டமையாகும். பிரதமர் தலைமையிலான இக்குழு சகல பிரதான கட்சித் தலைவர்களையும் உள்வாங்கியதாக இருப்பதுடன் நாட்டின் மிக முக்கியமான பிரச்சினைகளான அதிகாரப்பகிர்வு, இறைமை, தேர்தல்முறை மாற்றம்,




நல்லாட்சி, ஜனநாயக விழுமியங்கள் மற்றும் ஊழலற்ற ஆட்சி போன்றவற்றினை உறுதி செய்வதற்கு அவசியமான சட்டகத்தைப் புதிய அரசியலமைப்பு வழங்கவேண்டும்.

மொழி, மதம் மற்றும் நிறைவேற்றதிகாரங் கொண்ட ஜனாதிபதி முறை போன்ற விடயங்களை ஆராய்ந்து வருகின்றது. இக்குழு நகல் அரசியற் திட்டத்தைத் தயாரிப்பதற்கான பொறுப்பினையுங் கொண்டுள்ளது. வழிநடத்தற்குழுவின் செயற்பாடுகளுக்கு உதவுவதற்கென ஆறு உபகுழுக்கள் உருவாக்க ப்பட்டுள்ளன. அவை மனித உரிமைகள், சட்ட ஒழுங்கு, பொது நிதி, நீதித்துறை, மத்திய மாகாண உறவுகள் மற்றும் பொதுச்சேவை ஆகிய விடயங்கள் குறித்துத் தமது அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

நாட்டில் மிக நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட அரசியல் மறுசீரமைப்பு இன்று இடம்பெற்று வருகின்றது. அதில் அதிகரித்து வரும் இனமத தேசியவாதம், அரசியல் விருப்பமின்மை மற்றும் கருத்தியல் வேறுபாடுகள் போன்ற பல காரணிகள் எதிர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்தி உள்ளன. இத்தகைய தடைகளைக்களைந்து அரசியலமைப்பு உருவாக்கச் செயன்முறையை வெற்றிகொள்வது பிரஜைகளுக்குரிய மிக முக்கிய பொறுப்பாகும்.

அதேபோன்று சகல இனத்தவர்களதும் நலன்கள், உரிமைகள் மற்றும் அபிலாஷைகளை உள்வாங்குவதாகப் புதிய யாப்பு காணப்பட வேண்டும். அவ்வாறின்றேல் மீண்டும் ஒருமுறை அரசியல் அமைப்பு உருவாக்கத்தில் தோல்வி கண்ட நாடாக இலங்கை காணப்படும். இலங்கை நாட்டின் எதிர்கால சந்ததியினருக்காகவும், தேசத்தின் நலனுக்காகவும் அரசியல மைப்பு உருவாக்கப் பணியில் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது காலத்தின் தேவையாகும்.

**ஆர். ரமேஸ், விரிவுரையாளர்,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்,**
**இலங்கை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டு சிறுகைத்தொழில் முயற்சிகளைக் கவனத்திலெடுப்போமா?

கொடூர யுத்தத்தினால் பல்வேறுபட்ட சவால்களை எதிர்கொண்ட கிராமங்களில் மூதூரிலுள்ள முன்னம் போடிவெட்டையும் ஒன்று. திருகோணமலை மாவட்டத்திலே இயங்குகின்ற மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களே பெரும்பாலும் பெண்களது வாழ்வாதார முயற்சிகளுக்கு அன்று முதல் இன்றுவரை ஆதரவளித்து வருகின்றன. அந்தவகையில் போரினாற் பாதிக்கப்பட்ட இக்கிராமத்துப் பெண்களும் தமது தேவைகளையும், உரிமைகளையும் ஓரளவேனும் நிறைவேற்றிக் கொள்ள வாய்ப்பாகவிருந்தது இவர்களது மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் எனலாம். 1989ஆம் ஆண்டில் முன்னம்போடிவெட்டை கிராமசேவையாளர் பிரிவினைச் சேர்ந்த பெண்கள் ஒன்றுதிரண்டு இச்சங்கத்தினை ஆரம்பித்தனர். இச்சங்கம் ஆரம்ப காலத்தில் திருமதி. தி. தமயந்தி அவர்களின் தலைமையில் முப்பது அங்கத்தவர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பகாலத்தில் தமது சங்கத்துடன் இளைஞர் குழுக்கள், சிறுவர் கழகம், விளையாட்டுக் கழகம் மற்றும் விவசாய அமைப்பினையெல்லாம் இணைத்துத் தமது சங்கத்தினை மிகச் சிறப்பான முறையில் முன்னெடுத்துச் சென்றனர். தமது பகுதிவாழ் இளைஞர் யுவதிகளின் நலனையும், மக்களது நலனையும் கருத்திற்கொண்டு விளையாட்டுக் கழகங்கள் மற்றும் இளைஞர்கழகங்களின் ஊடாக விளையாட்டுப்போட்டி நிகழ்வுகள், சிரமதானப் பணிகள் மற்றும் வெள்ள நிவாரணப்பணிகள் போன்றவற்றினை மேற்கொண்டனர். விவசாய அமைப்பினை இணைத்து சிறுசேமிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து, சேமிப்பு நிதியினைப் பயன்படுத்திச் சங்க அங்கத்தவர்களுக்கு சிறு விவசாயக் கடன்களையும் வழங்கி வந்தனர். இந்தநிலையில் மீண்டும் 2005 இல் ஏற்பட்ட இடப்பெயர்வு அவர்களது சங்கச் செயற்பாடுகளினை முடக்கின. மீண்டும் 2007 ஆம் ஆண்டு வே. குமாரியின் தலைமையில் இச்சங்கம் புனரமைக்கப்பட்டது. இதில் அறுபது அங்கத்தவர்கள் மீண்டும் இணைந்து கொண்டனர். தொடர்ச்சியாகப் பல்வேறுபட்ட அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பிரதேச செயலகத் திடமிருந்து அவர்கள் பெற்ற பயிற்சிகள், திறன்கள் மற்றும் வழிகாட்டல்கள்தான் அவர்கள் மீண்டும் தமது வினைத்திறனான செயற்பாடுகளினை முன்னெடுக்க வழிகாட்டிற்று. 2013 ஆம் ஆண்டு பிரதேச சபையின் வேண்டு கோளுக்கு இணங்க விழுதின் செயற்பாடுகளுக்குள் இச்சங்கம் உள்வாங்கப்பட்டது. மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஊடாக வாசகர் வட்டங்கள், அமரா போரம் மற்றும் இளைஞர் கழகம் அக்கிராம முன்னேற்றத்தின் பொருட்டு உருவாக்கப்பட்டன. அமரா போரத்தின் அங்கத்தவர்களுக்கும் மாதர் சங்க அங்கத்தவர்களுக்கும் *'குட்டி அரசாங்கம்'* பற்றிய விழிப்புணர்வும், சமூகவகைப் பொறுப்புக்கூறல் பயிற்சி, பால்நிலைப் பயிற்சி மற்றும் பரிந்துரைப் பயிற்சி போன்ற பயிற்சிகளும் வழங்கப்பட்டன. இவற்றின் மூலமாக அவர்கள் பெற்ற விழிப்புணர்வு தமது அடிப்படைப் பிரச்சினையான பொருளாதாரப் பிரச்சினையினைத் தீர்ப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட வைத்தது.

> கடந்த சில மாதங்களாக இத்தகைய உற்பததியினையும் கொள்வனவு செய்வதில் பாவனையாளர்களின் ஆர்வம் குறைந்து, வருவதாகவும், செயற்கை இழைகளாலான உற்பத்திகளைப் பெறுவதில் ஆர்வங் காட்டி வருவதாகவும் ஆதங்கம் தெரிவிக்கின்றனர்.

தமது பிரதேச செயலருக்குத் தங்களின் கிராமத்திலுள்ள மூலவளங்களைப் பயன்படுத்தி சுயதொழிலொன்றினைப் பெண்களுக்காக ஆரம்பிப்பதற்காகச் சுயதொழில் உதவி கோரி கடிதத்தினைச் சமர்ப்பித்து தமது பிரச்சினைகளையும், தேவைகளையும் முன் வைத்தனர். இவர்களது வேண்டுகோள்களுக்குச் செவிமடுத்த பிரதேச செயலகம் சேவா லங்கா மற்றும் எகெட் நிறுவனங்களிடம் இவர்களது தேவையினை முன்வைத்தது. அதன் பயனாக சுமார் ஏழு இலட்சம் பெறுமதியான தும்புக் கைத் தொழில் இயந்திர உபகரணங்களை அவர்களுக்கு வழங்கியது. மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் தமது சேமிப்பான இரண்டு இலட்சம் ரூபா நிதியினைத் தங்கள் தும்புக் கைத்தொழில் நிலையத்தினை நிறுவுதற்கான முதலீடாகப் பயன்படுத்திக் கொண்டனர். இந்த நிலையம் மக்களது முழுமையான பங்களிப்புடன் அமைக்கப்பட்டு, மூதூர் பிரதேச செயலாளர், திருகோணமலை மாவட்டப் பொருளாதாரஅபிவிருத்தி உத்தியோகத்தர், சேவா லங்கா திட்ட உத்தியோகத்தர் மற்றும் அமரா போர அங் கத்தவர்கள், மாதர் சங்க அங்கத்தவர்களின் பங்குபற்றலுடன் தும்புத் தொழிற்சாலை திறந்து வைக்கப்பட்டது. ஆரம்பத்தில் பத்துப்பேர் மாத்திரமே இத் தொழிலில் கூட்டாகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டனர். பின்னர் இருபத்தை இணைந்து கயிறு திரித்தல், கால்மிதி தயாரித்தல் மற்றும்தும்புத்தடிசெய்தல் போன்ற உபகரண உற்ப்பத்திகளை தயாரித்து விற்பனைசெய்யப்பட்டு வருகின்றார்கள். இவர்களுக்குத் தேவையான அனைத்துமூலவளங்களும் அவர்களது கிராமத்திலிருந்தே பெற்றுக் கொள்ளப்படுகின்றது. ஆரம்பத்தில் இதில் மாதவருமானமாக இரண்டாயிரம் மட்டுமே ஒவ்வொருவருக்கும் கிடைத்தது. ஆனாலும் அகம் நிறுவனம் இவர்களுக்குரிய வெளிப்படுத்தலினைக் கண்காட்சியொன்றின்மூலமாக ஏற்படுத்திக் கொடுத்தது. அதன் விளைவாக அவர்களது வருமானம் சுமார் பத்தாயிரத்தினை எட்ட ஆரம்பித்தது. தொடர்ந்தும் இம்முயற்சியாளர்கள் பல்வேறுபட்ட தனியார் அமைப்புகள், வியாபார நிலையங்கள் மற்றும் இதரநிறுவனங்களிடம் ஓடர்களைப் பெற்றுவருகின்றனர். ஆனாலும் கடந்த சில மாதங்களாக இத்தகைய உற்பத்திகளைக் கொள்வனவு செய்வதில் பாவனையாளர்களின் ஆர்வம் குறைந்து வருவதாகவும், செயற்கை இழைகளாலான உற்பத்திகளைப் பெறுவதில் ஆர்வங் காட்டி வருவதாகவும் ஆதங்கம் தெரிவிக்கின்றனர். இத்தகைய சிறுகைத்தொழில் முயற்சியாளர்களின் முயற்சியினை மதித்து அவர்களுக்கான வாய்ப்புக்களினைப் பெற்றுக் கொடுக்கத் தாமதமின்றி முன்வருவோமாக!

எஸ். கிரியாசக்தி,
கடற்கரைச்சேனை,
மூதூர். -


## பெண்ணாகிய தலைவியே வாழ்க....!




தத்தித் திரியும் தும்பியைப்
போல் தவழ்ந்து
வரும் செய்திகளையும்
பெற்ற தாய் தன் பிள்ளையைச்
சுமப்பது போல சுவாரஸ்யமானதும்
பெண்ணின் பெருமையையும்.
திரட்டித் தரும் தலைவியே ..
எந்நாளும் உன் புகழ் -
உலகெங்கும் ஓங்க
விண்ணைத்தொடும் மலைகளைப்
போல் உயர்ந்து வாழ
வாழ்த்துகின்றேன்.

சந்திரசேகரம் வனிதா,
பாரதி விதவைகள் நலன்புரி சங்கம்
மூதூர்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## பெரும்பான்மையினச் சகோதரிகளை ஈர்த்த விழுதின்

# ஒரு கோப்பை போஷாக்கான உணவு !



"பெண் தலைமைத்துவக் குடும்பங்களை வலுப்படுத்தல், நல்லிணக்க வழிமுறையின் முதற்படி" எனும் தொனிப் பொருளின் கீழ் மொனராகலையில் இடம்பெற்ற பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கான சர்வதேச தின நிகழ்வின் இறுதியில் விழுதின் முன்னாள் அலுவலர் செல்வி. பு. ஜீவிதா அவர்கள் தலைமையில் மட்டக்களப்பு விழுது அணியினர் சஞ்சீவி இயற்கை உணவுவகைகள் பற்றி பங்குபற்றியோருக்கு செய்முறைகளுடன் கூடிய விளக்கங்களை வழங்கினார்கள். அது பங்குபற்றுனர்களிடையே பெரும் வரவேற்பினைப் பெற்றதுடன் தமது சியம்பலாண்டுவ பிரதேச செயலர் பிரிவில் நிலவும் போசாக்கின்மைப் பிரச்சினைக்கு இத்தகைய உணவு வகைகள் பெரும் அருமருந்தாக அமையுமெனவும், தமது கிராமங்களில் இதற்கான விழிப்புணர்வினை வழங்குமாறும், தாம் அனைத்துவகையான ஏற்பாடுகளையும் செய்துதருவதுடன் செய்முறைக்கான பொருட்களை வழங்குவதாகவும் உறுதியளித்துள்ளனர். சியம்பலாண்டுவ பிரதேச செயலர் மற்றும் மருத்துவ அதிகாரிகளும் இவ் வேண்டுகோளினை ஏற்கனவே முன்வைத்துள்ளதனால் எமது நல்லிணக்கச் செயன்முறைகளில் இதனையும் நாம் உள்ளடக்கத் தீர்மானித்துள்ளோம்.

## பெண்களது பிரச்சினைகளை அலசி ஆராய்ந்த உரையாடல் அமர்வு




கிளிநொச்சியில் இடம்பெற்ற சான்றிதழ் வழங்கிய நிகழ்விலே இடம்பெற்ற *"தீர்மானமெடுக்கும் துறைகளில் பெண்களின் வகிபாகமும், அவர்களுக்கான வாய்ப்புக்கள் மற்றும் எதிர் கொள்ளும் சவால்களும்"* என்ற உரையாடல் அமர்வானது பெண்களது சமகாலப் பிரச்சினைகளினை வெளிக்காட்டுவதாக அமைந்து பங்குபற்றுனர்களின் பாராட்டினைப் பெற்றது. இதில் மன்னார், புத்தளம், யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டப் பெண்கள் சமாசத் தலைவியர் கலந்து கொண்டதோடு பொருளாதாரம் மற்றும் வாழ்வாதாரச் செயற்பாடுகளில் பெண்களது நிலைமை,சமூகத் தளங்களில் பெண் தலைவியரின் வகிபாகமும், அவர்களுக்கான எதிர்கால இருப்பும், அரசியற் கட்சிகளும், பெண் தலைவியர் மற்றும் தீர்மானம் எடுக்கும் ஆற்றலுள்ள பெண்களைக் காணத்தவறுதல் மற்றும் சமூகப் பண்பாட்டுத் தளங்களில் பெண்களின் இடர்ப்பாடுகள் பற்றிய தலைப்புக்களின் கீழ் தமது கருத்துக்களையும் சமர்ப்பித்திருந்தனர். இந்த உரையாடல் அமர்வினை யாழ்.பல்கலைக் கழகத்தின் சமூகவியல் துறையின் சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி திரு. சுப்பிரமணியம் ஜீவசுதன் அவர்கள் நெறிப்படுத்தியிருந்தார்கள்.




## பெண் வேட்பாளராகக் களமிறங்கத் தயாராகும் பெண்களுக்கான பயிற்சிகள்



எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களுக்கான அறிவித்தல்கள் இன்னமும் வெளியிடப்படாத நிலையிலும் அரசியலில் ஆர்வங் கொண்ட பெண்கள் தமது வல்லமையினைக் கட்டியெழுப்ப சிவில் சமூக அமைப்புக்களினால் நடாத்தப்படும் பல பயிற்சிகளில் பங்குபற்றி வருவதனைக் காணமுடிகின்றது. அண்மையில் விழுது நிறுவனம் மூலமாகவும் சுமார் நூற்றைம்பதுக்கும் மேற்பட்ட அரசியலில் ஆர்வங் கொண்ட பெண்களுக்கு சிறப்பான பயிற்சிகள் மிகச் சிறந்த வளவாளர்களால் வழங்கப்பட்டிருந்தன. குறிப்பாக, பெண்கள் அரசியலில் பங்குபற்றுவதன் முக்கியத்துவம், அதற்காகத் தம்மைத் தயார்ப்படுத்தல், புதிய தேர்தல் முறையும், பெண்களுக்கான இருபத்தைந்து வீத ஒதுக்கீடும், பரிந்துரைகளில் தம்மை ஈடுபடுத்தல், வேட்புமனுக்கள் சமர்ப்பித்தல், பிரசார யுக்திகள், தொடர்பாடற் திறன்கள் மற்றும் ஊடகங்களின் மூலமான பரிந்துரைச் செயற்பாடுகள் மற்றும் பல விடயங்களில் அவர்களுக்கான பயிற்சிகள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றன. அப்பயிற்சிகளிற் சில...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுமுயற்சியின் இன்னோர் மைல்கல்

## விக்னேஸ்வரி!




விழுது நிறுவனம் தனிநபர் செயற்பாடுகளை விடக் கூட்டு முயற்சிகளினாலேயே மாற்றத்தினைச் சமூகத்தில் ஏற்படுத்தலாம் என்பதனை ஒவ்வொரு தலைவி இதழிலும் அழுத்தமாகக் கூறிவருவதனை நீங்கள் அவதானித்திருப்பீர்கள். அதன்வழி ஒவ்வொரு தலைவி இதழும் கூட்டுமுயற்சிகள் பற்றிய கட்டுரைகளை உங்களுக்குத் தந்தவண்ணமே உள்ளது. அந்தவகையில் இம்முறை தலைவியின் கூட்டுமுயற்சிகள் பக்கத்தினை அலங்கரிக்கின்றார் விக்னேஸ்வரி திருநாவுக்கரசு அவர்கள்.


பதினைந்து வயது ஆண்குழந்தையொன்றுக்குத் தாயான விக்னேஸ்வரி ஐம்பது வயதினையுடைய பெண் தலைமை தாங்கும் தலைவியாவார். அமைதியான தோற்றமும், மென்மையான குரலுமுடைய அப்பெண் ஐந்து இளம் பெண்களைத் தனது தையல் நிலையத்தில் தொழில் பயிற்றுவித்து, அவர்களுக்குத் தொழிலும் வழங்கியுள்ளார். அப்பணியில் ஆர்வமுடன் எந்நேரமும் புன்னகையுடனும், சுறுசுறுப்புடனும் பணியாற்ற ஊக்கப்படுத்தி வரும் அவரது ஆளுமை எம் மனதிலும் ஓர் வலிமையினை எம்மையறியாமலே தோற்றுவிப்பதனை உணரமுடிகின்றது. நவாலி வடக்கு, மானிப்பாயினை விலாசமாகக் கொண்ட விக்னேஸ்வரி தனது தையல்நிலையத்தினை சிறியதொரு கடையில் கூழா வடிச்சந்தியில் நடாத்தி வருகின்றார். பத்துப்பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் பிறந்த இவர் நாட்டின் அசாதாரண நிலை நிலவிய காலத்தில் வன்னிக்கு இடம்பெயர்ந்து சென்று, அங்கி ருந்து இந்தியாவுக்குச் சென்றார். பின்னர் அங்கே திருநாவுக்கரசு என்பவரைத் திருமணம் செய்திருந்த காலத்தில் கணவன் வெளி நாடு செல்ல ஆயத்தமானபோது தானும் நாடு திரும்பினார். ஆனால் வெளிநாடு செல்ல ஆயத்தமான கணவன் குறித்த நாட்டினைச் சென்றடையாத நிலையில் காணாமற் போய்விட்டார் என்ற செய்தி பின்னர்தான் இவருக்குத் தெரிந்தது. இந்நிலையில் அவரைக் கண்டுபிடிக்க அனைத்துவிதத்திலும் முயற்சித்த போதிலும் அது வெற்றியளிக்கவில்லை. இந்நிலையில் 2002 இல் மகன் பிறந்தார்.

ஏற்கனவே தையலில் சிறந்த தேர்ச்சி கொண்ட இவர் தனது குடும்பத்தினைக் கொண்டு நடத்த தையலினைத் தன் தொழிலாகக் கொண்டார். வன்னியில் இருந்தபோது தனக்கு அறிமுகமான கலைமகள் என்பவர் வட்டுக்கோட்டை மாவடியில் அவருக்குரிய இடத்தினைத் தொழிலினை ஆரம்பிப்பதற்காகக் கொடுத்து உதவினார். தனது வீட்டிலிருந்து நாளாந்தம் இரண்டு மைல்கள் பேரூந்தில் பயணஞ் செய்தே தனது தையல்நிலையத்தினை அடைந்து அதனை சிறப்புடன் நடாத்தி வந்தார். இவரது தையலின் சிறப்பு - ஆடைகளின் வடிவமைப்பு வாடிக்கையாளர்களைக் கவர ஆரம்பித்தது. இந்நிலையில் ஒரு அரசசார்பற்ற நிறுவனம் (பெயரினை அவரால் ஞாபகப்படுத்த முடிய வில்லை) இவரை அணுகி, அவருக்குத் தெரிந்ததையற் கலையினை முப்பத்தைந்து பெண்களுக்குப் பழக்கி உதவுமாறும், தாம் அதற்கான ஏற்பாடுகளினைச் செய்து தருவதாகவும் வேண்டியது. அதற்காக அந்நிறுவனம் ' சின்னம்மா குமரேசு தையல் நிலையம்' என்ற இடத்தில் தையல் இயந்திரங்களை வழங்கி உரிய ஏற்பாடுகளைச் செய்து கொடுத்ததுடன் தையற் போதனாசிரியர் என்ற வகையில் மாதாந்தம் பதினையாயிரம் ரூபா ஊதியத்தினையும் வழங்கியது. இவரிடம் தையற்கலையினைப் பயின்ற பலர் இன்று தமது சுயதொழிலாகத் தையற்கடைகளை நடாத்தி வருவதனைக் காணும்போது தனக்கு மகிழ்ச்சியாகவுள்ளதாக உள்ளார்ந்தமான திருப்தியுடன் கூறுகின்றார்.

**எனது தையற் சிறப்பினைக் கண்டு வை-குறோ நிறுவனம் 2016 ஆம் ஆண்டுக்கான 'Lydia Award' இற்கு சிபாரிசு செய்திருந்தது.**

'ஆரம்பத்தில் மூன்று தையல் மிக்ஷின்கள் மட்டுமே என்னிட மிருந்தன. எனது தையல் நிலையத்தினைப் பார்த்த 'வை-கு றோ' என்ற நிறுவனம் எனக்கு கட்டம் கட்டமாக கடனுதவியினை வழங்கினார்கள். இதன்வழி என்னிடம் தற்போதுள்ள ஒன்பது மிஷின்களுடன் எனது தையல் நிலையத்தினைக் கூழாவடிக்கு மாற்றிவிட்டேன். இடைப்பட்ட காலத்தில் நான் உறவினர்கள் சிலரால் ஏமாற்றப்பட்டு பெரும்கடன் தொல்லைக்கு உள்ளாகியிருந்தேன். எனது சொந்த நிலத்தினை விற்று ஒரு தொகைக் கடன்களை அடைத்து தற்போதும் மீதிக் கடனைச் செலுத்தி வருகின்றேன். எல்லாவற்றையும் வெறுத்துப்போய் இருந்த நேரத்தில் என்னைப்போன்ற பலர் வாழ்வதற்கு வழியின்றித் தவித்ததனைப் பார்த்துவிட்டு ஐந்து இளம்பெண்களை என்னுடன் இணைத்து மீண்டும் தொழிலில் ஈடுபடவேண்டிய நிலைக்கு என்னைத் தயார் படுத்திக் கொண்டேன். மாதாந் தம் அவர்கள் புன்னிரெண்டாயிரம் ரூபாய் வரை பெறுகின்றனர். கூட்டாக இணைந்து செய்யும்போது இத் தொழில்முயற்சி எமக்கு இலகுவாக இருக்கின்றது.






என்னுடன் பல வருடங்களாக அனு, பிரியா, சூட்டி, சோபா மற்றும் தர்சி இணைந்து பணியாற்றி வருகின்றார்கள். அவர்களும் கூட வீடுகளில் வைத்தும் ஆடைகள் தைத்து வருமானமீட்டி வருகின்றனர். அவர்களுக்கு நிறைய சம்பளம் கொடுத்து அவர்கள் வளர்வதனைப் பார்க்க வேண்டும் என்பதே என் அவா' என்கின்றார். பல சமூகமட்ட அமைப்புக்களில் அங்கத்துவம் பெற்றிருந்தும் என்னால் உரிய கூட்டங்களுக்கு எனது பணிச்சுமை காரணமாகப் போகமுடிவதில்லை. அதனால் நான் எந்த பொறுப்புக்க ளையும் எடுத்துக் கொள்வதில்லை என்கின்றார். எனது தையற் சிறப்பினைக் கண்டு 'வை-குறோ' நிறுவனம் 2016 ஆம் ஆண்டுக்கான 'Lydia Award' இற்கு சிபாரிசு செய் திருந்தது. PEER Servants இனால் வழங்கப்பட்ட அவ்விருது எனக்குக் கிடைத்தமையையிட்டு நான் பெருமைப்படுவதுடன் இதற்காக நான் வை-குறோ நிறுவனத் திற்கும் எனது நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்" என்கின்றார்.



**இன்னும் பத்து பேரை வைத்து எனது தொழிலை விரிவாக்க எனக்கு நிதியுதவியும், இடமும் தேவை. இந்த தலைவி இதழின் ஊடாக நான் அனைவரிடமும் இந்த வேண்டுகோளினை முன்வைக்கின் றேன் என்கின்றார் விக்னேஸ்வரி.**

இன்னும் பத்து பேரை வைத்து எனது தொழிலை விரிவாக்க எனக்கு நிதியுதவியும், இடமும் தேவை. இந்த தலைவி இதழின் ஊடாக நான் அனைவரிடமும் இந்த வேண்டுகோளினை முன்வைக்கின்றேன் என்கின்றார் விக்னேஸ்வரி. உண்மையில் இத்தகைய கூட்டுமுயற்சிச் செயற்பாடுகளை இனங்கண்டு வெளிக் கொணர்ந்த வை-குறோ மற்றும் அவர் தன்னை முதன்மைப்படுத்த உதவிய குறித்த நிறுவனங்களின் செயற்பாடுகள் பாராட்டுக்குரியவை. இவரைப் போன்ற பல பெண்கள் இன்னும் வெளிவர வேண்டுமென்பதே எமது அவா. தையற்கலையாலும் சமூகத்தினை ஆளலாம் என்பதனை நிரூபித்த விக்னேஸ்வரிக்கு எமது பாராட்டுக்களை விழுது நிறுவனம் சார்பாகவும், தலைவி சார்பாகவும் தெரிவிக்கின் றோம். அவரது கனவுகள் யாவும் கூடிய விரைவில் நிறைவேறட்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவியர் வரிசையில்...




இச்சங்கமானது சேமிப்புப் பழக்கத்தைத் தமது அங்கத்தவர்களிடையே ஊக்குவிக்கும் அதே வேளை அங்கத்தவர்களின் குடும்பங்களில் மதுப்பாவனை முற்றாக விலக்கப்பட்டுள்ளது. கணவன் அல்லது மனைவி மது அருந்தினாலோ அல்லது விற்றாலோ மூன்று முறை எச்சரிக்கப்படுவார்கள். தொடர்ந்தும் அவர்கள் அச்செயற்பாட்டில் ஈடுபட்டால் சங்க அங்கத்துவம்இல்லாமற் செய்யப்பட்டு விடும்.

விழுது நிறுவனத்தின் மூலம் சங்கமுகாமைத்துவம், பங்கேற்புடனான அபிவிருத்தி, பால்நிலை, பரிந்துரை மற்றும் பிரதேச சபை தொடர்பான பயிற்சிகளில் இச்சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டுள்ளார்கள். அது மட்டுமல்லாமல் வாசகர் வட்டச் செயற்பாடுகள் மூலமாகவும் தகவல்களைப் பகிரும் செயற்பாடுகளில் ஆர்வமுடன் செயற்பட்டு வருகின்றனர். பிரதேச சபை, பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட திணைக்களங்கள் மூலமாகப் பெற்றுக்கொள்ளக் கூடிய சேவைகள்எவையென்பது தொடர்பான விளக்கங்களை பெற்றுள்ளதுடன் அதனைப் பிறருக்கும் சொல்லிக் கொடுக்கின்றனர்.



**விழுது இனங்கண்டுள்ள தலைவியர் வரிசையில் இம்முறை தலைவியினை அலங்கரிக்கின்றார் திருகோணமலை மாவட்டத்திலுள்ள மூதூர் பிரதேசத்தின் பெரியவெளி மல்லிகைத்தீவினைச் சேர்ந்த**

## திருமதி ராஜேந்திரன் சாந்தாதேவி அவர்கள்.

விழுது நிறுவனத்தினால் வலுவூட்டப்பட்டு மிகுந்த வினைத்திறனுடன் செயற்படுகின்ற சங்கங்களுள் ஒன்றாகக் காணப்படுகின்றது மூதூர் பெரியவெளி மல்லிகைத்தீவு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமாகும். இச்சங்கத்தின் முன்னாள் செயலாளராக விளங்கிய திருமதி ராஜேந் திரன் சாந்தாதேவி தற்போது திருகோணமலை மாவட்டப் பெண்கள் சமாசத்தின் செயலாளராகவும் செயற்பட்டு வருகின்றார். 2002 ஆம் ஆண்டு தொடக்கம் இயங்கும் இச்சங்கத்தில் சாந்தாதேவி 2008 ஆம் ஆண்டு முதல் அங்கத்துவம் வகித்து வருவதோடு இரண்டு வருடங்களாக இச்சங்கத்தின் செயலாளராகவும் செயற்பட்டுள்ளார். தான் பதவி வகித்த காலப்பரப்பு உட்பட தமது சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பான அனைத்து விடயங்களினையும் நேர்த்தியான முறையில் அவணப்படுத்தியும் வருகின்றார்.

39 வயதான இவர் நான்கு பிள்ளைகளுக்குத் தாயாகிய போதும் தனது குடும்பப் பொறுப்புக்களையும் கவனித்து, தனது கணவனின் ஒத்துழைப்புடன் சமூகசேவையினையும் மேற்கொண்டு வருகின்றமை இவரது தலைமைத்துவப் பண்புக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். 2013 இல் பதிவு செய்யப்பட்டிருக்கும் இச்சங்கத்தில் இரு வருடங்களுக்கு ஒருமுறை கட்டாயமாக நிர்வாகமானது யாப்பின்பிரகாரம் மாற்றமடைகின்றது. இதனால் சங்கத்தில் இருக்கும் அனைவருக்கும் தலைமைத்துவத்தை ஏற்கக்கூடிய வாய்ப்பு காணப்படுவதாகச் சாந்தாதேவி அவர்கள் குறிப்படுகின்றார்கள். இச்சங்கமானது மூதூர் பிரதேச பெண்கள் வலையமைப்பிலும் அங்கத்துவத்தினைக் கொண்டு மக்களுக்கான சேவைகளினை வழங்கி வருகின்றது.

2012 ஆம் ஆண்டு முதல் விழுதுடன் இணைந்து கொண்ட இச்சங்கம் பல பயிற்சிகளைப் பெற்று ஏனைய சங்கங்களினை விடச் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது. இச்சங்கத்தினைச் சாந்தாதேவி நெறிப்படுத்தி வருவதனால் ஆரம்பத்தில் நாற்பத்தைந்து அங்கத்தவர்களைக் கொண்டிருந்த சங்கம் பின்னர் எண்பத்தைந்து அங்கத்தவர்களாக உயர்வடைந்துள்ளமை குறிப்பிடதக்க விடயமாகும். ஆரம்ப காலத்தில் இச்சங்கமானது சிரமதானம் மற்றும் அரிசி சேகரிப்பு போன்ற செயற்பாடுகளை மட்டும் முன்னெடுக்கும் ஓர் சங்கமாகவேதான் காணப்பட்டது. ஆனாலும் சாந்தாவின் முயற்சியினால் பல நன்மைகளினை அனுபவிக்க வாய்ப்புக்கள் கிட்டின. குறிப்பாக இச்சங்கம் தற்போது சுமார் இருபத்து நான்கு இலட்சம் ரூபா நிதியினைத் தமது பிரதேசத்தின் அபிவிருத்திக்காகக் கைவசம் வைத்துள்ளது. ஆரம்பத்தில் ZOA மற்றும் UNDP போன்ற அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலமாக மொத்தமாக பதினெட்டு இலட்சம் வரையான நிதியுதவியினைப் பெற்றுக் கொண்டதுடன் அதனைத் தமது அங்கத்தவர்களுக்கு அவர்களது வாழ்வாதாரத்தை உயர்த்தி கொள்வதற்காகச் சுழற்சி முறையில் குறைந்த வட்டி வீதத்திற்கு வழங்கி பெருக்கி வருகின்றார்கள். இப்பிரதேசம் விவசாய முயற்சியில் ஈடுபடுவோரின் தொகையினை அதிகம் கொண்டுள்ளது. அதனால் பருவகாலத்தில் கடன் பெற்று அதன் மூலம் இச்சங்கத்தின் குடும்பம் அதிக நன்மைகளினைப் பெற்று வருகி ன்றது. மேலும் இருபத்தைந்துக்கும் மேற்பட்டோர் சுய தொழிலிலும் ஈடுபட்டு முன்னேற்றமடைந்து வருகின்றனர். இதனாற்தான் இப்பிரதேசத்தில் நுண்கடன் நிதி வழங்கும் நிறுவனங்களினைக் காண்பது சற்றுக் குறைவாக உள்ளது.

கல்விக்கான செயற்பாடுகளிலும் இச்சங்கம் தனது கவனத்தினைச் செலுத்தி வருகின்றது. இவர்களது கல்விக்குழுவானது தமது கிராமத்துப் பாடசாலையில் சிரமதானம், கால்கோள்விழா, புலமைப்பரீட்சையில் சித் தியடைவோருக்கான மாதாந்தக் கொடுப்பனவுகள் வழங்கல், இடைவில கல் மாணவர்களை இனங்கண்டு மீண்டும் அவர்களைப் பாடசாலையில் இணைத்து விடலும், அவர்களுக்குத் தேவைப்படும் உதவிகளினை வழங்கலுமெனப் பல்வேறுபட்ட கல்விசார் பணிகளினை முன்னெடுத்து வருகின்றனர். அதுமட்டுமல்லாது தொடர்ந்தும் தம் பிரதேச மாணவர்களைக் கல்வியில் ஊக்குவிக்கும் செயற்பாட்டிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இத்தகைய இவர்களது செயற்பாடுகளினால் சமூகத்தில் மாதர் சங்கத்தினருக்குச் சிறந்த அங்கீகாரம் காணப்படுகின்றது. இவர்களினால் முன்னெடுக்கப்பட்ட பல செயற்பாடுகள் புகைப்பட ஆதாரங்களாகவும் பாட சாலையிற் காட்சியளிக்கின்றன. பாடசாலையில் மட்டுமல்ல வலயக் கல்விப் பணிப்பாளர்களும் இவர்களது சேவைகளினைப் பாராட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. பாலர் பாடசாலையும் இவர்கள் மூலமாகப் பல உதவிகளைப் பெற்று வருகின்றது. அதுமட்டுமல்லாமல் கோயில், பொதுவிடங்கள், மரணவீடுகள் போன்ற எல்லா நிகழ்வுகள், செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். தமது மாதர் சங்கத்திற்கென பொதுநோக்கு மண்டபமொன்றினையும் பிரதேச செயலகத்தினூடாகப் பெற்றிருக்கின்றார்கள். ஆரம்பத்தில் ஒரு சில கதிரைகளுடன் காணப்பட்ட சங்கத்திற்குத் தற்போது 100 கதிரைகள் வரை கிடைத்துள்ளதுடன் அவர்கள் அதனைத் தமது கிராமத்தின் தேவைக்காகவும் பயன்படுத்தி வருகின்றனர்.

கிராமத்தில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாக உடனுக்குடன் கடிதங்கள் எழுதுவதற்கும், அதனை உரிய இடத்தில் கொண்டு போய்க் கொடுத்துப் பேரம் பேசுவதற்கும் ஆற்றல் கிடைத்துள்ளதாகவும் கூறுகின்றார்கள். எடுத்துக்காட்டாகத் தமது கிராமத்திற்குள் ஏழு இலட்சம் பெறுமதியான பாதையொன்றினை இத்தகைய வல்லமையினால் தம்மால் பெற்றுக்கொள்ள முடிந்ததாகத் தெரிவிக்கின்றார்கள். அது மட்டுமல்லாது கிராமத்திற் காணப்படும் வடிகால் பிரச்சினை மற்றும் போக்கு வரத்துப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தற்போது அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருவதாக கூறுகின்றார்கள். விழுது நிறுவனத்தோடு இணைவதற்கு முன்பு கிராம அபிவிருத்திச் செயற்பாடுகளுக்குப் பெரிதளவு முக்கியத்துவம் கொடுக்கவில்லையெனவும், தற்போது கிராம மட்டத்திலான அபிவிருத்திற்கு மிக்க முக்கியத்துவம் கொடுப்பதாகவும் தெரிவிக்கின்றார்கள்.



விழுது நிறுவனத்தினால் நெறிப்படுத்தப்படும் வாசகர்வட்டச் செயன்முறையில் பத்துப் பேர் இணைந்திருந்தபோதும் சுமார் நாற்பத்தைந்து சங்க அங்கத் தவர்கள் அதிற் பங்குபற்றுகின்றார்கள். நாற்பத்தேழு பேரைக் கொண்ட அமரா போரமொன்று உருவாக்கப்பட்டுள்ளது. பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்துவதற்காகக் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் திரு. நாகேஸ்வரனோடு கலந்துரையாடி உதவிகளைப் பெற்றுத் கொடுப்பதற்காகக் கடிதங்கள் கொடுத்துள்ளார்கள். இங்குள்ள அமரா குழுவிற்கு இவர் எப்போதும் பக்க பலமாக இருப்பதாக இச்சங்கத்தினர் கூறுகின்றார்கள்.

விழுது நிறுவனத்தின் தொடர்பு கிடைத்ததன் பின்னர் தாம் யோசிக்கும் விதத்திற்கூடப் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறுகின்றார்கள். கிராமத்தின் அபிவிருத்தி தொடர்பாக ஆண்கள்தான் செயற்பட வேண்டும், இதற்காகப் பிரதேச சபை மற்றும் பிரதேச செயலகங்களில் ஆண்கள்தான் போய்ப் பேசவேண்டும் என்று நினைத்துக்கொண்டு இருந்தோம். ஆனால் நாம் பெற்ற அறிவு மற்றும் திறன்கள் எமது மனப்பாங்கில் பலத்த மாற்றத்தினைக் கொண்டுவந்ததன் விளைவால் இன்று எத்தகைய வேலைகளையும் முன்னெடுக்கக்கூடிய நபர்களாக நாம் மாறியுள்துடன் அதனைச் செயலிலும் காட்டியுள்ளோம். சாந்தா இவ்வாறு தனது அனுபவத்தினைக் கூறுகின்றார் " சமூகசேவை என்பது ஆண்களுக்கு மட்டும் உரியவிடயமல்ல. பெண்களுக்கும் அந்தப் பொறுப்பு உண்டென்பதனை உணர்ந்துள்ளோம், பெண்பிள்ளை களை வீட்டினுள்ளே வைத்து வளர்த்து, அவர்களுக்கு வெளியுலகைக் காட்டாமல் இருந்த நிலைமை இனியும் தொடர அனுமதிக்கக் கூடாது. அவர்களுக்கும் ஆண்பிள்ளைகளுக்குக் கொடுக்கும் சுதந்திரத்தைக் கொடுத்து வளர்க்க வேண்டும். எனது பெண்பிள்ளைகளையும் சுதந்திரமான முறையில் தற் போது வளர்க்க ஆரம்பித்துள்ளேன். இதன் காரணமாக ஆரம்பத்தில் அமைதியான மற்றும் பயந்த சுபாவத்துடன் இருந்த எமது மகள் தற் போது தனித்துச் செயற்பட முன்வருவதுடன் தைரி [illegible] உணரமுடிகின்றது " என்கின்றார்

LLRC தொடர்பாகத் தான் கற்றுக்கொண்டதன் பின்னர் தகவல்களைத் திரட்டிக் கொடுப்பதில் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளதுடன் அதனை உரியதரப்பினருடனும் தயக்கமின்றிப் பகிர்ந்து வருவதாகவும் கூறுகின்றார். திருகோணமலை மாவட்டத்தில் கானாமற்போனோர் தொடர்பாக மேற்கொள்ளப்படும் ஆர்ப்பா ட்டங்களில் அவர்களது சங்கத்தில் இருந்து கலந்து கொள்பவர்களின் வீதம் அதிகரித்து வருவதனைக் காணமுடிகின்றது. விழுதின் மூலம் பெற்றுக்கொள்கின்ற அறிவினை மாதாந்தக் கூட்டத்தில் ஏனைய அங்கத்தவர்களுடன் பகிர்ந்து கொள்கின்றனர். இதன் விளைவாகக் கிராமத்தில் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பும் வீதம் அதிகரித்துள்ளதாகவும், பொது நிகழ்வுகளில் பெண் தலைமை தாங்கும் குடும்பப் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாகவும் சங்க அங்கத்தவர்கள் கூறுகின்றனர். தற்போது அமரா போரம் காணப்படுவதனால் அதன் அங்கத்தவர்கள் முன்பு போல் இல்லாது சமூகவிடயங்களுக்கு முன்னால் வருவதோடு கிராமமக்களும் இவர்களை ஏற்றுக் கொள்ளப் பழகியிருப்தாகவும் கூறுகின்றார்கள். பல காலமாகக் கிராமங்களில் திருமணம் போன்ற சுப விசேஷங்களுக்குப் போகாத பெண்கள் தற்போது இத்தகைய நிகழ்வுகளிற் பங்குபற்ற ஆரம்பித்துள்ளனர்.

திருகோணமலை மாவட்டப் பெண்கள் சமாச அங்கத்தவர்களினால் வைத்தியர் பற்றாக்குறை தொடர்பாக மூதூர் தளவைத்தியாலை நிலவிய பிரச்சினைக்கு எதிராக நடாத்திய ஆரப்பாட்டத்தில் இவர்க ளின் சங்க அங்கத்தவர்களில் அரைவாசிப் பெண்கள் பங்குபற்றித் தமது எதிர்ப்பினைத் தெரிவித்திருந்தனர். இன்று அப் பிரச்சினை தீர்க்கப்பட்டு அனைத்து மக்களும் இவ் வைத்தியசாலை மூலம் பயன் பெற்று வருகின்றனர்.

விழுது நிறுவனம் அல்லாத வேறு பல நிறுவனங்களின் ஆதரவும் இவர்களுக்குக் கிடைத்துள்ளது. அந்நிறுவனங்கள் மூலமாகச் சங்கத்தின் நிதி முகாமைத்துவம் போன்ற பயிற்சிகளை யும் பெற்றுள்ளனர். அகம் நிறுவனம் மூலமாகப் பெண்கள் வன்முறை, பிள்ளைகளின் கல்வி, சிறுவயதுத் திருமணம், துஸ்பிரயோகம் மற்றும் பெண்கள் வெளிநாடு செல்லல் போன்ற பிரச்சினைகளை எவ்வாறு தீர்ப்பது பற்றிய பல பயிற்சிகள் மற்றும் கருத்தரங்குகளிலும் பங்கு பற்றியிருக்கின்றார்கள்.

பிரதேச சபையில் இடம்பெறும் மாதாந்த கூட்டத்திற்கும் முன்னர் தவறாது சமுகமளித்திருக்கின்றனர். பல நிறுவனங்கள் எமக்கு வலுவூட்டியுள்ளபோதும் தமக்குப் பொது சேவையில் ஈடுபட வேண்டும் என்ற எண்ணம் விழுதுடன் இணைந்து பணியாற்றியதன் பின்னரே எமக்கு எழுந்தது. இதனாற்தான் பல பரிந்துரைச் செயற்பாடுகளிலும் எம்மை ஈடுபடுத்தியுள்ளோம் எனக் குறிப்பிடுகின்றார்கள். பெண்களாகிய நாம் சென்று அரசியற் தலை வர்களைச் சந்திக்கும் போது அவர்களே எமது வல்லமையினைக் கண்டு ஆச்சரியப்படுகின்றனர். இவற்றுக்கெல்லாம் காரணமாயிருந்த விழுது நிறவனத்திற்கு நாம் என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம் என்கின்றனர் பெரியவெளி மல்லி கைத் தீவு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர். தொடரட்டும் அவர்களது மாற்றத்துடனான பணிகள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் கடிதங்கள்

விழுதின் 'ஒரு கோப்பை போஷாக்கு உணவு' பற்றிச் சொல்லப்பட்டுள்ள விடயம் என்னைக் கவர்ந்துள்ளது. இதுபோன்று எதிர்காலத்தில் எமது பிரதேசங்களிலுள்ள தானியங்கள், மரக்கறி வகைகள் மற்றும் இலைகளிலுள்ள சத்துக்கள் மற்றும் அவற்றின் மருத்துவக்குணங்கள் என்பவற்றினைத் தாங்கி தலைவி வரவேண்டுமென விரும்புகின்றேன்.

—ரீ.சிவந்தினி,
சின்னக்குளம்,
பள்ளிக்குடியிருப்பு,
தோப்பூர். –

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தினால் 'தலைவி' காலாண்டு இதழ் வெளிவருவது வரவேற்கத்தக்கதோர் விடயமாகும். பெண்களுடைய பிரச்சினைகள் தொடர்பாகக் குறிப்பாகப் பெண்தலைமை தாங்கும் குடும்பங்களின் பிரச்சினைகள் பற்றியும், அவர்களின் முயற்சிகள் மற்றும் ஆக்கங்கள் பற்றியும் வெளிக்கொணர்வது வரவேற்கப்படக்கூடியது. இதழ் பதினேழு தாங்கி வந்த ' விருந்தாவன் விதவைகள் செய்த பாவம்தான் என்ன? என்ற கட்டுரை மனதினை நெருடும் ஓர் கட்டுரையாகும். இத்தகையதோர் இதழ் வெளிவருவது கட்டாயமானதாகும்.

எஸ்.குகதாசன்,
யாழ்.பல்கலைக்கழகம்.

'தலைவியர் வரிசையில்'என்ற தொடர்பகுதி மிகவும் அருமையானது. ஒவ்வொரு பெண்ணும் ஓர் தலைவியாக வரவேண்டுமென்பதனைத் தூண்டும் வகையில் அவர்களின் பெருமை செயற்பாடுகள் மற்றும் தலைமைத்துவம் பறைசாற்றப்படுகின்றது. சட்டக்கோவை என்ற ஒரு பகுதி உள்ளடக்கப்பட்டால் இன்னும் நன்றாகவிருக்கும்.

–போ.ஜெயதர்சன்,
வாழைச்சேனை,
மட்டக்களப்பு.–

தலைவி சஞ்சிகையில் வெளிவந்த ' கூட்டுவிவசாயத்தில் அமரா அங்கத்தவர்கள்' என்ற கட்டுரை போருக்குப் பின் அமரா போர அங்கத்தவர்கள் கூட்டு விவசாயம் மூலம் வருமானமீட்டும் செயற்பாடுகளைக் கூறியுள்ளமை சிறப்பானதாகும். இத்தகைய கட்டுரைகள் மூலம் அமரா போர அங்கத்தவர்களது முயற்சிகள் ஊக்கப்படுத்த அவர்களது பொருளாதாரத்தினை ஈட்டிக் கொள்வதற்கான வழிகாட்டல்களும் வழங்கப்படுவது பாராட்டுக்குரியதாகும்.


– வீ.மரீஸ்ரெலா,
மன்னார். –

கவிதை ஆக்கங்கள் வாசகர்களின் உணர்வுகளைத் தூண்டுவனவாகவும், புதிய கவிஞர்களை ஊக்கப்படுத்துவதாகவும் உள்ளன. பெண்மையின் எழுச்சி தொடர்பான ஆக்கங்கள் சிறப்பாகப் பொருத்தப்பாட்டுடன் எழுதப்பட்டுள்ளன. மேலும் பல ஆக்கங்கள் இணைக்கப்படுதல் இன்னும் தலைவியை சிறப்புடையதாக்கும். சமூகத்திற்குத் தேவையான, அறியாத பல விடயங்களும் வெளிக்கொணரப்பட்டுள்ளன. வடிவமைப்பு மிகச் சிறப்பாகவுள்ளது.

– ஜீ. டிக்ஷன்,
இல 20, அன்பியம் வீதி, பூம்புகார்,
திருகோணமலை. –

## விழுதின் ஆய்வு வெளியீடுகளின் வரிசையில் ...

**'Identifying the role of Women as Leaders and Decision makers in oversight and policy making institutions'**




விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தினால் வெளியிடப்பட்ட நான்காவது ஆய்வானது போருக்குப் பின் இலங்கையில் பெண்களது சமூகவகிபாகம் குறிப்பாக கிளிநொச்சி மற்றும் முல்லைத் தீவுப் பிரதேசங்களில் எவ்வாறானதாக அடையாளப்படுத் தப்படுகின்றது என்பதனைப் பற்றி 'Identifying the role of Women as Leaders and Decision makers in oversight and policy making institutions' என்ற தலைப்பின் கீழ் ஆராய்கின்றது. தீர்மானமெடுக்கும் துறைகளில் அவர்களது பங்கேற்பும், பங்களிப்பும் எவ்வாறான நிலையில் காணப்படுகி ன்றது, கொள்கைவகுத்தல்,சமூகத் தளங்களில், சமூக நல்லிணக்கச் செயன்முறைகளில் எத்தகைய நிலமை நிலவுகிறது என்பதனைப் பற்றியும் இந்த ஆய்விலிருந்து அறியமுடிகின்றது. அரசியற்கட்சிகள் இத்தகைய பெண்களது வகிபாகம் பற்றிய பகுப்பாய்வொன்றினை மேற்கொள்ள வேண்டிய நிலையிலுள்ளதென்பதனையும் அதன் மூலம் எதிர்காலத்தில் அவர்களது இடம் அத்தகைய கட்சிகளுக்கு இன்றிமையாதது என்பதனையும் இந்த ஆய்வு சுட்டி நிற்கின்றது. இந்த ஆய்வின் மூலம் பெறப்பட்ட முடிவுகள் மற்றும் சிபாரிசுகளை அறிய விரும்பினால் விழுது தலைமை அலுவலகத்தினை அல்லது கிளைக்காரியாலயங்களை நேரடியாகத் தொடர்புகொண்டு ஆய்வு நூலினைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

# பெண்களுக்கான தேர்தல்நிதியம்

**வரப்போகின்றது உள்ளூராட்சிசபைத் தேர்தல்கள் வருட இறுதியில்.**

விழுது நிறுவனமானது சமூகமட்ட அமைப்புக்கள் தமது பிரதேசத்தில் போட்டியிட விரும்பும் பெண்களுக்காகத் தேர்தல் நிதியமொன்றினை (Election fund) ஆரம்பித்துள்ளமை பற்றி முன்னைய இதழ்களிலும் குறிப் பிட்டிருந்தோம். இவர்களுக்காக உதவும்முகமாக அதற்கான வங்கிக் கணக் கொன்றும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதற்கு உதவும் சமூகமட்ட அங்கத்தவர்கள், வாசகர் வட்டங்கள் மற்றும் பிற நிறுவனங்களின் பங்களிப்பினை வெளியிடப்படும் தலைவி இதழ்களில் வெளியிட்டு வருகின்றோம். குறித்த பகுதியிலிருந்து கிடைத்த தொகை அப்பிரதேசத்தில் போட்டியிடும் பெண்களுக்கே பகிர்ந்தளிக்கப்படும். இதற்கான ஆவணங்கள் அனைத்தும் வைப்பிலிடுபவர்களிடமும், அதன் பிரதி தலைமைக்காரியாலயத்திலும் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இன்னும் நான்கு மாதங்களில் புதிய தேர்தல் முறைமையின் கீழ் மாகாண சபை மற்றும் உள்ளுராட்சி மன்றத் தேர்தல்கள் நம் நாட்டில் நடாத்தப்படவிருப்பதாக தேர்தல்கள் ஆணையாளர் உத்தியோக பூர்வமாக நாட்டு மக்களுக்கு அறிவித்துள்ளார். புதிய முறைமையின்கீழ் இனிவரும் தேர்தல்களுக்கு அதிகபணத்தினைச் செலவிட வேண்டிய தேவையில்லை. ஆனாலும் மக்களிடையே சில விழிப்புணர்வுச் செயற்பாடுகளை வேட்பாளர்களாகக் களமிறங்கப் போகின்ற பெண்கள் நடாத்துபவர்களாக இருந்தால் அவர்களுக்கு ஒரு தொகைப்பணம் கட்டாயம் தேவையாக இருக்கும். கட்டுப்பணம் செலுத்துவதற்கு சுயேட்சையாக களமிறங்கும் பெண்களுக்கு இந்த நிதியம் உதவலாம். எதிர்வரும் காலங்களில் அரசியற்கட்சிகளின் மூலமாகப் போட்டியிடும் பெண்களும் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபா செலுத்த வேண்டிய நிலை வரும். விழிப்புணர்வுசார் கையேடுகள் மற்றும் கருவிகளினைப் பயன்படுத்துவதற்கும் குறிப்பிட்ட தொகையினை தேர்தல் நிதியத்திலிருந்து பெறவேண்டி வரும். இந்நிதியம் குறித்ததோர் உச்சத் தொகையினை எட்டுமிடத்தில் இத்தொகையினை நாம் மாவட்டங்களிலுள்ள சமாசங்களிடம் ஒப்படைத்து விடுவோம். அவர்களே தொட ர்ந்து இதனைச் செயற்படுத்தி வருவர். அவர்களினால் எமக்கு அனுப்பப் படும் விபரங்கள் தவறாது தலைவியில் வெளியிடப்பட்டு வரும். எனவே நீதிக்காகப் போராடும் பெண்களுக்கு அரசியலில் இடம் கிடைக்கவேண்டுமென விரும்பும் உள்ளங்களும், சமூகமட்ட அமைப்புக்களும் மற்றும் பிற நிறுவனங்களும் இன்றே உங்கள் பங்களிப்பினை நல்க முன்வாருங்கள்.

நீங்களும் பங்களிப்புச் செய்யலாம். உங்கள் தொகையினைப் பின்வரும் வங்கிக்கணக்கில் வைப்பிலிடலாம்.

**கணக்கு இலக்கம் : 1100022753**
**வெள்ளவத்தை கிளை, கொமர்ஷல் வங்கி**

## நன்றிகள்!

இத் தலைவி இதழ் தயாரிப்பதற்கான நிதிப்பங்களிப்பினை இம்முறை விழுதுடன் இணைந்து போகுஸ் வுமன் நிறுவனமும் வழங்கியுள்ளது.

## விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்திடமிருந்து...

அன்புத்தோழியரே! உங்களது சங்கங்களினது முன்னோடியான செயற்பாடுகள் தொடர்பான விடயங்களினை எமக்குச் சான்றுகளுடன் அனுப்பி வையுங்கள். அவற்றின் நம்பகத்தன்மைக்கு நீங்களே பொறுப்பாளிகள். உங்களது ஆக்கங்களினை நீங்கள் மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலுள்ள விழுதின் கிளைகளிலேயும் கையளிக்கலாம். அங்கிருந்து தலைவி செய்திமடலினை இலவசமாகவும் பெற்றுக் கொள்ளலாம். ஆக்கங்கள் பற்றிய உங்கள் சுதந்திரமான, காத்திரமான கருத்துக்களினை நாம் வரவேற்கின்றோம். அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் அலுவலர்கள் உங்கள் ஆக்கங்களினை உறுதிப்படுத் தல்களுடன் அனுப்பிவைக்குமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றோம். உங்கள் ஆக்கங்கள், கருத் துக்கள் வந்தடைய வேண்டிய முகவரி:

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம், இல 191,
பௌத்தாலோக மாவத்தை,
கொழும்பு 4
தொலைபேசி மற்றும் தொலைநகல் தொடர்புகளுக்கு:
0112506272 , 0112585190
மின்னஞ்சல் : info@viluthu.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org